# நிதிய முகாமையாளரின் அறிக்கை
# உயர் விளைவு நிதியம்

அன்பார்ந்த முதலீட்டாளருக்கு,

31 மார்ச் 2024 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான CT CLSA உயர் விளைவு நிதியத்தின் ஆண்டறிக்கையினை சமர்ப்பிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம்.

நிதியத்தின் அலகொன்றின் தேறிய சொத்தின் பெறுமதியானது 31 மார்ச் 2023 இல் நிறைவடைந்த பன்னிரண்டு மாதங்களில் காணப்பட்ட 11.74% வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது 31 மார்ச் 2024 இல் நிறைவடைந்த நிதியாண்டில் உங்களது நிதியம் 20.77% ஆல் உயர்வடைந்துள்ளது. இதன் விளைவாக அலகொன்றின் தேறிய சொத்தின் பெறுமதியானது 31 மார்ச் 2024 இல் ரூபா 17.2 ஆக காணப்பட்டது.

**பொருளாதார மீளாய்வு**

இலங்கையின் பொருளாதாரமானது 2023 இல் தொடர்ச்சியாக பின்னடைவைச் சந்தித்தது. இது இலங்கை மத்திய வங்கியினால் ஜூன் 2023 இல் கடைப்பிடிக்கப்பட்ட வசதியளிக்கும் நாணயக் கொள்கை நிலைப்பாட்டின் காரணமாகவும் தாழ்மையான அடித்தளத்திலிருந்தான உருவாக்கம் காரணமாகவும் இரண்டாம் அரைப்பகுதியில் ஒரு மீட்டலை அடைந்தபோதிலும் ஆகும். இதன் விளைவாக, இலங்கையின் பொருளாதாரமானது முன்னைய ஆண்டின் பொருளாதார வீழ்ச்சியான -7.8%[2] உடன் ஒப்பிடும்போது 2023 இல் -2.3%[2] ஆல் ஒரு சுருக்கத்தினை பதிவுசெய்தது. ஒட்டுமொத்த பலவீனங்களுக்கு அப்பால், 31 டிசம்பர் 2023 இல் நிறைவடைந்த ஆண்டில் வேளாண்மைத் துறையானது +2.6%[2] வளர்ச்சியினை அடைந்தவேளை கைத்தொழில் மற்றும் சேவைகள் துறைகள் முறையே -9.6%[2] மற்றும் -0.2%[2] ஆல் சுருக்கமடைந்தன.

| | 2021 | | 2022 | | 2023 | |
|---|---|---|---|---|---|---|
| | % வளர்ச்சி | % of GDP | % வளர்ச்சி | % of GDP | % வளர்ச்சி | % of GDP |
| வேளாண்மை | 0.9 | 8.8 | -4.6 | 8.7 | 2.6 | 8.3 |
| கைத்தொழில் | 5.7 | 30.0 | -16.0 | 30.3 | -9.6 | 25.6 |
| சேவைகள் | 3.5 | 55.6 | -2.0 | 56.1 | -0.2 | 59.9 |
| GDP | **3.7** | | **-7.8** | | **-2.3** | |

*மூலம்: புள்ளிவிபரத் திணைக்களம்*


சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) உலக பொருளாதார கண்ணோட்டத்தின் (WEO) இன் பிரகாரம், 2023 இல் காணப்பட்ட அதே வேகத்தில் 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய வளர்ச்சியானது 3.2%[3] ஆக காணப்படும் என திட்டமிடப்பட்டுள்ளது. அபிவிருத்தியடைந்த சந்தைகளிலான வளர்ச்சி ஒரு மேல்நோக்கிய திருத்தத்திற்கு உட்படும்வேளை வெளித்தோன்றும் மற்றும் அபிவிருத்தியடையும் சந்தைகளிலான வளர்ச்சியானது மந்தநிலையில் காணப்படும் என திட்டமிடப்பட்டுள்ளது.

**வட்டி வீதச் சூழல்**

| | Mar-23 | Jun-23 | Jul-23 | Aug-23 | Oct-23 | Nov-23 | Mar-24 |
|---|---|---|---|---|---|---|---|
| **SDFR (%)** | 15.5 | 13.0 | 11.0 | 11.0 | 10.0 | 9.0 | 8.5 |
| **SLFR (%)** | 16.5 | 14.0 | 12.0 | 12.0 | 11.0 | 10.0 | 9.5 |
| **SRR (%)** | 4.0 | 4.0 | 4.0 | 2.0 | 2.0 | 2.0 | 2.0 |

*மூலம்: இலங்கை மத்திய வங்கி*

2022 இல் நிலவிய பொருளாதார நெருக்கடியின்போது பொறுப்பேற்கப்பட்ட இறுக்கமான நாணயக் கொள்கை மற்றும் இறைவரித் திருத்தங்களுடன் சேர்ந்து உலகளாவிய வழங்கல் சங்கிலிகளிலான முன்னேற்றமும் விலை ஸ்திரத்தன்மையினை மீட்டமைப்பதற்கும் நிதியியல் முறைமையின் ஸ்திரத்தன்மையினை பாதுகாப்பதற்கும் துணைபுரிந்ததனால் இலங்கை மத்திய வங்கியானது ஜூன் 2023 இல் ஒரு வசதியளிக்கும் நாணயக் கொள்கை நிலைப்பாடு நோக்கி நகர்ந்தது. தளர்ச்சியான நாணயக் கொள்கை நிலைப்பாடு மற்றும் உள்ளூர் கடன் உகப்பாக்கல் வரைகூறுகள் ஜூலை 2023 அளவில் அரசாங்கப் பிணையங்களிலான விளைவுகளை நடுப் பதின்ம மட்டங்களுக்கான ஒரு செங்குத்தான வீழ்ச்சியினை தூண்டியது. அதன் பின்னர் வருவாய் வளைவானது தொடர்ந்தும் வழமைக்கு திரும்பியதுடன், இதற்கு நியதிச்சட்ட ஒதுக்க விகிதத்திலான ஒரு வீழ்ச்சியினால் துணையளிக்கப்பட்டு இலங்கை ரூபாய் திரவத்தன்மையானது பலப்படுத்தப்பட்டமை மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் டொலர் ஒதுக்கத் திரட்டல் என்பவற்றால் துணையளிக்கப்பட்டது. குறைவான சந்தை கடன் வழங்கல் வட்டி வீதங்கள் படிப்படியாக புதிய கடனுக்கான கேள்வியினை அதிகரித்ததன் காரணமாக ஜூன் 2023 இலிருந்து தனியார் துறைக்கான கடன் வளர்ச்சியானது மாதத்திலிருந்து மாதம் ஒரு சாத்தியமான வளர்ச்சியினை வெளிக்காட்டியதுடன் மார்ச் 2024 இல் இது வருடத்திலிருந்து வருடம் +3.6% வளர்ச்சியினை பதிவுசெய்தது.




*மூலம்: இலங்கை மத்திய வங்கி*

| | Oct-23 | Nov-23 | Dec-23 | Jan-24 | Feb-24 | Mar-24 |
|---|---|---|---|---|---|---|
| **தனியார் துறை கடன் வளர்ச்சி (%)** | -4.3 | -3.1 | -0.6 | 0.0 | 0.9 | 3.6 |

*மூலம்: இலங்கை மத்திய வங்கி*

**<u>வெளிவாரி வர்த்தகம்</u>**

நாடானது இறுக்கமான இறைவரி மற்றும் நாணய நிலைமைகளுடன் 2023 இன் முதலாம் பாதியில் போராடியதன் காரணமாக ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகள் ஆகிய இரண்டிலும் ஒரு மந்தநிலைமைக்கு மத்தியில் வர்த்தகப் பற்றாக்குறையானது 2023 இல் மேலும் சுருக்கமடைந்து USD 5 பில்லியனுக்கும் குறைவாக காணப்பட்டது. கைத்தொழில் ஏற்றுமதிகள் 2023 இல் -11.3%[1] வீழ்ச்சியினைக் கண்டது. இதற்கு பெரும்பாலும் ஜவுளி மற்றும் ஆடைகள் பிரிவான நாட்டின் மிகப்பெரிய வணிகச்சரக்கு ஏற்றுமதிகளில் ஏற்பட்ட -18.0%[1] வீழ்ச்சியின் காரணத்தினாலாகும். உயர்வடைந்த கோவிட் காலத்தின்போது இருப்புகளின் தேங்கிய நிலைமைகள் மற்றும் முக்கிய வாடிக்கையாளர் சந்தைகளில் ஏற்பட்ட இறுக்கமான நாணய நிலைமைகள் சரக்கு அனுப்பாணைகள் நிலைகுலைவதற்கு காரணமாயிருந்தன. குறைவடைந்த பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் இறக்குமதி கட்டுப்பாடுகள் /ஒதுக்கீட்டு முறைமைகளின் அமுலாக்கம் என்பவற்றை பிரதிபலிக்கும் விதமாக இடைநிலை மற்றும் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் முறையே -11.5%[1] மற்றும் -9.4%[1] ஆல் வீழ்ச்சியடைந்தன.

**நாணயமாற்று வீதச் சூழல்**

2022 இல் காணப்பட்ட செங்குத்தான நாணய பெறுமதியிறக்கத்தின் பின்னர் இலங்கை ரூபாயானது அமெரிக்க டொலருக்கு எதிராக வருடத்திலிருந்து வருடம் +13.0%[1] ஆல் பலமடைந்து 31 டிசம்பர் 2023 இல் ரூபா 323.97 ஆக காணப்பட்டது. நாடு ஓரளவு வழமைக்கு திரும்பியதன் காரணமாக இரண்டாம் பாதியில் சுற்றுலாத்துறை உள்வருகைகள் முன்னேற்றமடைந்த வேளை முன்னைய ஆண்டின் பொருளாதார நெருக்கடியின் போதான அதிகரித்த தொழிலாளர் இடம்பெயர்வு மற்றும் திடமான பரிமாற்றக வீதத்தினால் துணையளிக்கப்பட்டு தொழிலாளர் பணமனுப்பல்களும் பலமடைந்தன. மேலும், உள்ளூர் நாணயத்திலான அரசாங்கப் பிணையங்களிலான உயர்ந்த விளைவுகள் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் ஆர்வத்தினை கவர்ந்ததன் காரணமாக நாட்டிற்குள்ளான முதலீட்டுத் தேக்க உட்பாய்ச்சல்கள் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினை அனுபவித்தன. இதன் விளைவாக, மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்கங்கள் மே 2024 இன் இறுதியில் ஒரு மதிப்பிடப்பட்ட USD 5.4 பில்லியனாக[1] மேம்பட்டன. (இது பயன்பாட்டில் நிபந்தனைகளைக் கொண்ட PBoC பரிமாற்றம் உள்ளடங்கலாகும்).

**பணவீக்கம்**

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டியினால் (CCPI, 2013=100) அளவிடப்படும் தலைப்பு பணவீக்கம் மற்றும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டி (NCPI, 2013=100) என்பன செப்டம்பர் 2022 இல் காணப்பட்ட உச்ச நிலையான முறையே 69.8%[2] மற்றும் 73.7%[2] இனை எட்டியதன் பின்னர் 2023 இல் தொடர்ந்தும் வேகந்தணிந்து காணப்பட்டது. 2022 இன் இறுதிப்பாகத்தில் இலங்கை மத்திய வங்கியினால் அமுல்படுத்தப்பட்ட இறுக்கமான நாணயக் கொள்கை ஆட்சிமுறையுடன் சேர்த்து இறுக்கமான இறைவரி முறைகள் பணவீக்கத்தினை மீண்டும் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதற்கு காரணியாயிருந்தன. பொருளாதாரத்தில் விலை அழுத்த மட்டங்கள் தனி எண்ணாக திரும்பியதுடன் பொருளாதார நடவடிக்கைகளை தூண்டுவதற்காக ஜூன் 2023 இல் இலங்கை மத்திய வங்கி வட்டி வீதங்களை தளர்த்துவதற்கு ஆரம்பித்தது. ஜூன் 2023 இல் தனி எண் மட்டங்களுக்கு தலைப்பு பணவீக்கம் திரும்பியதிலிருந்து (மே 2024 இல் 0.9%[2]; CCPI, 2021=100) இது பெரும்பாலும் இலங்கை மத்திய வங்கியின் மத்திய கால இலக்கான 5-6% எல்லைக்கு கீழே காணப்பட்டது.


**இறைவரி வருமானக் கணக்குகள்**

இறைவரி வருமானமானது 2023 இல் தொடர்ச்சியாக முன்னேற்றமடைந்து ரூபா 3 டிரில்லியனை[1] (மொ.உ.உ. இன் 11.1%) எட்டியதுடன் வருடத்திலிருந்து வருடம் +52.7%[1] வளர்ச்சியினை பதிவு செய்தது. இதற்கு வருமானத்திலான வரி, பெறுமதி சேர்த்தல் வரி (VAT) வீதத்திலான அதிகரிப்பு மற்றும் விலக்களிப்புகளின் அகற்றல்கள், மற்றும் முழு வருடத்திற்குமான சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு கட்டணத்தின் விதிப்பு என்பன அரசாங்கத்தின் பணப்பேழைக்கு அர்த்தமுள்ள விதத்தில் பங்களிப்பு செய்தன. மேற்குறிப்பட்ட வருமான எழுப்புதல் நடவடிக்கைகள் இலங்கை அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) 2023 இற்கான வரி வருமானம் மற்றும் முதன்மை மீதிகளை பொருத்தளவில் அளவுசார் செயற்திறன் இலக்குகளை சந்திப்பதனை இயலுமையாக்கியது. 2023 இல் அரசதுறை ஊதியங்கள் மற்றும் சம்பளங்களின் வருடத்திலிருந்து வருடம் காணப்பட்ட வீழ்ச்சியுடன் அரசாங்கச் செலவினங்கள் பரந்தளவில்

கட்டுப்படுத்தப்பட்டன. எவ்வாறாயினும், 2022 இல் வழங்கப்பட்ட உயர் வட்டி வீதத்தினைக்கொண்ட கடன் பிணையங்களுக்கு மத்தியில் வட்டிக் கொடுப்பனவுகள் தொடர்ந்தும் +56.9%[1] ஆல் விரைவாக உயர்வடைந்தன. சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் மீளாய்வின் பிரகாரம், மொத்த உள்ளூர் உற்பத்திக்கான (GDP) அரச வருவாயானது 2024 மற்றும் 2025 இல் முறையே 13.6%[3] மற்றும் 15.1%[3] ஆல் அதிகரிக்கும் என திட்டமிடப்பட்டுள்ளன. இதற்கு மோட்டார் வாகனங்களது இறக்குமதியிலான தடையினை நீக்குவதனாலும் ஆதனங்களில் விதிக்கப்பட்டுள்ள புதிய வரி வழிமுறைகளினால் துணையளிக்கப்படுகின்றது.

**உயர் விளைவு நிதியத்தின் கண்ணோட்டம்**

இலங்கை மத்திய வங்கியானது பொருளாதாரத்தில் பணவீக்க அழுத்தங்களை கட்டுப்படுத்துவதற்காக 2023 இன் முதலாம் பாதியில் அதன் இறுக்கமான நாணயக் கொள்கை நிலைப்பாட்டினை பராமரித்தது. எவ்வாறாயினும், நாணயக் கொள்கை மேற்கொள்வதற்கான ஒரு தரவினால் இயக்கப்பட்ட அணுகுமுறையினை கடைப்பிடித்து, இ.ம.வ. ஆனது ஜூன் 2023 இல் பொருளாதார வளர்ச்சியினை தூண்டுதல் நோக்கி அதன் முன்னிறுத்தத்தினை நகர்த்தியது. இக்காலத்தின்போது ஒரு மாதத்திலிருந்து மாதம் அடிப்படையில் தலைப்பு பணவீக்கமானது நிலைபேறுடைய ஒடுக்கத்தினை காண்பித்தது. இதன் விளைவாக, இ.ம.வ. ஆனது ஜூன் 2023 இல் அதன் நாணயக் கொள்கை தளர்த்தல் வட்டத்தினை ஆரம்பித்து கொள்கை வட்டி வீதங்களில் 250 அடிப்படை புள்ளிகள் குறைப்பினை அறிவித்தது. மேலும், இ.ம.வ. நிதி அமைச்சுடன் இணைந்து ஜூன் 2023 இன் இறுதியில் உள்ளூர் கடன் மீள்கட்டமைத்தல் வரன்முறைகளை அறிவித்தது. இந்த சாத்தியமான முன்னேற்றங்கள் 2023 இன் இரண்டாம் பாதியில் அரசாங்கப் பிணையங்களின் விளைவுகளில் ஒரு குறிப்பிடத்தக்க வீழ்ச்சிக்கு வழிசமைத்தது. அதன்பின்னரான மாதங்களில் இலங்கை மத்திய வங்கி தளர்வான நாணயக் கொள்கையினை தொடர்ந்ததுடன், ஜூன் 2023 முதல் மார்ச் 2024 வரைக்குமான காலப்பகுதியில் கொள்கை வட்டி வீதமானது மொத்தமாக 700 அடிப்படை புள்ளிகளினால் குறைக்கப்பட்டும் SRR ஆனது 200 அடிப்படை புள்ளிகளினாலும் குறைக்கப்பட்டன. அதேசமயம், இறைவரி அடிப்படையிலான வருவாய் ஒருங்கிணைத்தல் வழிமுறைகளின் அமுலாக்கம் மற்றும் தொழிலாளர் பணமனுப்பல்கள் மற்றும் சுற்றுலாத்துறை பெறுகைகள் வடிவிலான மேம்பட்ட அந்நிய செலாவணி உட்பாய்ச்சல்கள் உள்ளூர் பணச் சந்தை திரவத்தன்மைக்கு உதவின. குறைவான கொள்கை வட்டி வீதங்கள் மற்றும் மேம்பட்ட பணச்சந்தை திரவத்தன்மையினை பிரதிபலிக்கும் விதமாக வைப்புகள் மற்றும் கடன் வழங்கல் வட்டி வீதங்கள் கீழ்நோக்கிச் செம்மையாக்கப்பட்டன, இருந்தபோதிலும் கடன் வழங்கல் வட்டி வீதங்களிலான திருத்தம் காலம் பிந்தி ஏற்பட்டது. டிசம்பர் 2023 இன் இறுதியில் இடம்பெற்ற முதன்மை ஏலவிற்பனையில் 91 நாட்கள், 182 நாட்கள் மற்றும் 364 நாட்கள் திறைசேரி உண்டியல்களின் விளைவுகள் முறையே 14.50%[1], 14.16%[1] மற்றும் 12.93%[1] ஆக காணப்பட்டன.




*மூலம்: இலங்கை மத்திய வங்கி*

**சொத்து ஒதுக்கம்**

நிதியமானது 2024 இன் முதலாம் பாதியில் அதன் திறைசேரி உண்டியல்கள் உடைமையில் உயர்வடைந்த விளைவுகளிலிருந்து நன்மையடைந்தது. அதேசமயம், குறைவான கொள்கை வட்டி வீதங்கள் மற்றும் உள்ளூர் கடன்களின் மீள்கட்டமைப்புடன் இணைந்த இடர் வட்டத்தின் குறைப்பு என்பவற்றை பிரதிபலிக்கும் விதமாக அரசாங்கப் பிணையங்களின் விளைவுகள் கீழ்நோக்கி செம்மையாக்கப்பட்டதனால் நிதியமானது கூட்டாண்மை கடன் பிணையங்கள் பிரிவுகளில் தெரிவுசெய்யப்பட் வெளிப்பாட்டினை எடுத்தது. நிதியமானது பெரும்பாலும் அதன் சொத்து ஒதுக்கத்தினை நிலையான வைப்புகளில் பராமரித்ததுடன், நிலையான வைப்புகள், கூட்டாண்மை கடன்கள் மற்றும் கூட்டாண்மை சேமிப்புக் கருவிகளிலான நிதியத்தின் முதலீடுகள் விட்ச் ரேட்டிங்ஸ் மற்றும் /அல்லது லங்கா ரேட்டிங் ஏஜன்சியினால் வழங்கப்பட்ட தரப்படுத்தல்களின் பிரகாரம் முதலீட்டுத் தர வரன்முறைகளை முழுமையாக சந்தித்தன. 31 மார்ச் 2024 இல் நிதியத்தின் 78.6% ஆன முதலீடுகள் A- அல்லது அதற்கு மேல் தரப்படுத்தப்பட்ட கருவிகளைக் கொண்டிருந்தன.

| சொத்தின் வகை | அரசாங்கப் பிணையங்கள் | நிலை. வைப்புகள் | கூட்டாண்மை கடன் | காசு | கூட்டாண்மை சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| ஒதுக்கம் - மார்ச் 2023 | 71.0% | 21.7% | 0% | 0.001% | 7.3% |
| ஒதுக்கம் - மார்ச் 2024 | 63.7% | 19.7% | 15.2% | 0.0004% | 1.4% |

**நிதியத்தின் செயற்தின்**

நிதியத்தின் 31 மார்ச் 2024 இல் நிறைவடைந்த நிதியாண்டிற்கு வரிக்கு பிந்திய வருமானமானது ரூபா 821 மில்லியனாகக் காணப்பட்டது.

| 31 மார்ச் 2024 இல் உள்ளவாறான செயற்திறன் | | | | |
|---|---|---|---|---|
| **காலம்** | **3 மாதங்கள்** | **6 மாதங்கள்** | **12 மாதங்கள்** | **24 மாதங்கள்** |
| **செயற்திறன்** | **3.62%** | **8.29%** | **20.77%** | **34.95%** |

**உயர் விளைவு நிதியத்தின் கண்ணோட்டம்**

கேள்விப் பக்க பணவீக்க அழுத்தங்கள் சிறந்த கட்டுப்பாட்டினுள் இருப்பதனால், பொருளாதாரத்திற்கு உயர்ந்த மொத்த உள்ளூர் உற்பத்தி (GDP) இனை இலக்குவைத்து தனியார் துறை கடன் வளர்ச்சியினை உயிர்ப்பூட்டுவதற்கு (இது ஒப்பீட்டளவில் உற்சாகமின்றி காணப்பட்டது) இலங்கை மத்திய வங்கியினால் கொள்கை வட்டி வீதங்கள் மேலும் தளர்த்தப்படலாம் என்பதை நாம் மறுக்கவில்லை. மேலும் உயர் தரத்திலான வங்கி வைப்புகளில் காணப்பட்ட அரசாங்கப் பிணையங்களின் விளைவுகளின் கீழ் நிலவுகின்ற எதிர்மறையான கடன் இடர் வட்டமானது எதிர்வரும் மாதங்களில் வழமைக்கு திரும்பும் என நாம் எதிர்பார்க்கின்றோம். எவ்வாறாயினும், அரசாங்கப் பிணையங்களின் விளைவுகளிலான அனேகமான கீழ்நோக்கிய நகர்வானது ஏற்கனவே எய்தப்பெற்றுள்ளன என நாம் நம்புவதுடன் மத்திய காலத்தில் வட்டி வீதங்கள் பெருமளவில் திடமாக காணப்படும் என நாம் எதிர்பார்க்கின்றோம். சமீப காலத்தில் எதிர்வரும் தேர்தல் வட்டத்திற்கு முன்செல்லும்போது ஏற்படக்கூடிய ஏதேனும் இறைவரி வழுக்கல்கள் வட்டி வீதங்களில் உயர்நோக்கிய அழுத்தங்களை விளைவிக்கலாம் என்பதனால் ஏதேனும் அத்தகைய உயர்நோக்கிய வட்டி வீத அழுத்தங்களிலிருந்து பயனடைவதற்காக நிதியமானது ஒரு சராசரி முதிர்வாக 4.8 மாதங்களை பராமரிக்கின்றது. எமது எதிர்வுகூறலுக்கான கீழ்நோக்கிய இடர்களாக தளம்பலான பண்டங்களின் விலைகள் (உலகளாவிய மசகெண்ணெய் விலைகள் உள்ளடங்கலாக) மற்றும் நாணயத்தின் சாத்தியமான பெறுமதிகுறைப்பு (வெளிவாரி கடன் மீள்செலுத்தல் மற்றும் வாகன இறக்குமதி கட்டுப்பாடுகளிலான தளர்த்தல்களின் ஆரம்பத்தினைத் தொடர்ந்து) வடிவில் காணப்படுகின்றன. இவை பணவீக்க எண்களில் உயர்நோக்கிய அழுத்தத்தினை பிரயோகிக்கலாம். சமீபத்தைய மற்றும் மத்திய காலத்தில் விருப்பமான 4-6% மட்டங்களில் பணவீக்க எதிர்பார்ப்புக்களை நிலைநிறுத்துவதன் மூலம் இலங்கை மத்திய வங்கியானது அதன் நெகிழ்வான பணவீக்க குறிவைத்தல் ஆட்சிமுறையினை நிறைவேற்றும் என நாம் நியாயமான நம்பிக்கையுடன் உள்ளோம்.

**<u>மூலங்கள்</u>**

[1] இலங்கை மத்திய வங்கி (www.cbsl.gov.lk)

[2] சனத்தொகை மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் (www.census.gov.lk)

[3] சர்வதேச நாணய நிதியம் (www.imf.org)